Woodlands Hotel

*796 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for State Labour be pleased to state—

(*a*) whether it is a fact that lockout has been declared by the Woodlands Hotel in Edward Elliots Road, Mylapore, Madras about August 1971; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு என். வி. நடராசன்: (அ) சென்னை உட்லண்ட்ஸ் ஓட்டல் நிர்வாகம் 3-8-1971 பிற்பகல் 1 மணியிலிருந்து கதவடைப்பு செய்தது.

(இ) என்னுடைய முயற்சியின் பலனாகத் தொழிலாளர் நலத்துறை ஆணையாளரது முன்னிலையில் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. உடன்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து உட்லண்ட்ஸ் ஓட்டல் 26-8-1971-ல் மீண்டும் திறக்கப்பட்டது.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, இவ்விதமாக உணவு விடுதிகளில் ஏற்படுகின்ற கதவடைப்புகள் இனிமேல் நடக்காமல் இருப்பதற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு என். வி. நடராசன்: தலைவரவர்களே, உடனடியாகக் கூடுமான அளவில் இரு தரப்பாரையும் கலந்து பேச, அதை நிவர்த்தி செய்வது என்ற முறையை அரசு கடைப்பிடித்து வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், பொதுவாக ஹோட்டல் தொழிலாளர்கள், உட்லண்ட்ஸ் உள்பட, 6 மாதங்கள் பணியாற்றியவர்களை விலக்கி விடுவதாகவும், புதிதாக வேலைக்குச் சேர்ப்பதுமாகச் செய்கிறார்களே இப்படி நிரந்தரத் தன்மையில்லாமல் செய்கிறார்கள். அந்த முறையை மாற்றியமைக்க வேண்டுமென்ற முறையில் ராஜன் கமிட்டி சிபார்சு இருப்பதாக அறிகிறேன். ஆகவே, பல ஆண்டுகளாக வேலை செய்யும் தொழிலாளர்களை 6 மாதம் 6 மாதம் என்று செய்யும் இந்த ஹோட்டல்களின் பெயரிலேயே அரசு நடவடிக்கை எடுக்குமா? அங்கே நல்ல முறையில் இன்ஸ்பெக்ட் செய்து என்னென்ன ஹோட்டல்களில் இம்மாதிரி செய்கிறார்கள் என்பதைப் பரிசிலனை செய்ய ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு என். வி. நடராசன்: தலைவரவர்களே, ஹோட்டல் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளும் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்கள். இராஜன் கமிட்டி ரிப்போர்ட்டின் அடிப்படையில் தக்க நடவடிக்கை

எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்

அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

*797 வினா —திரு என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரிசனங்களுக்கு வீட்டுமனைகள் ஆர்ஜிதம் செய்து தரப்படுவதில் தாமதம் இன்றி வீட்டு மனைகள் வழங்கிட வழிவகை செய்யும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அரிசனங்களுக்கு வீட்டு மனைகள் ஆர்ஜிதம் செய்து தாமதமின்றி வழங்கிட வகை செய்யும் செயற் குறிப்பு அரசின் நடைமுறையில் இருந்து வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒவ்வொரு காலாண்டு முடிவிலும் ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அனுப்புகின்றனர்.

திரு த. சோனையா : தலைவரவர்களே, அரிசனங்களுக்கு நில ஆர்ஜிதம் செய்ய வேண்டுமென்று மனுக்கொடுத்தால் 10, 15 ஆண்டு களுக்கு முன் நிலம் ஆர்ஜிதம் செய்தவர்கள் இன்னும் வீடுகள் கட்டப் படாமல் இருக்கிறது. அதனால் கொடுப்பதற்கு ஏதுவில்லை என்று சில அதிகாரிகள் கூறுகிறார்கள். ஆகவே முன்னால் கொடுத்த இடங்களிலே அரசு கடன் கொடுத்து உதவி இந்தத் திட்டத்தை நிறைவேற்றுமா அல்லது கட்ட முடியாமல் இருப்பவர்களிடமிருந்து அந்த இடத்தை எடுத்துக் கட்ட முன்வருபவர்களுக்குக் கொடுக்க அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, நில ஆர்ஜிதம் செய்து வீட்டுக்காக மனை கொடுப்பது ஒரு திட்டம். வீடு கட்ட முடியாமல் இருக்கின்றவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டம் இன்னொன்று. ஆகவே ஆர்ஜிதம் செய்த இடங்களிலே யெல்லாம் அரசு வீடு கட்டும் என்ற திட்டம் இல்லை. ஆர்ஜிதம் செய்து கொடுக்கும் இடத்தில் வீடு கட்ட முடியவில்லை யென்றால்தான் அரசு வீடு கட்டிக் கொடுக்கிறது. பத்தாண்டுகளுக்கு முன் ஆர்ஜிதம் செய்த சில இடங்களெல்லாம் மிகப் பள்ளமாக, நஞ்சை நிலங்களாக எடுத்ததால் 3 அடி, 4 அடி பள்ள மாக இருக்கிறது. அவைகளைத் தூர்த்து வீடுகளைக் கட்ட வேண்டுமென்றால் ஏராளமான பணம் செலவாகிறது. அப்படியும் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து முதலிலே, 14,000 பேருக்குக் கொடுக்க வேண்டிய நிலங்களிலே பல தவறுகள் இருந்தன. அதை யெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றி கிட்டத்தட்ட 8,000 பேர் இன்றைக்கு அவர்கள் வீடுகள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். மீதி 6,000 பேர்கள் இன்னும் கட்ட முடியாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசே இந்தத் தூர்த்துகின்ற ஒரு திட்டத் தைக் கையாள வேண்டும், அதற்கு அதிகமாகப் பணம் செலவாகும் என்பதால் அதைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. வீ. செல்லதுரை : தலைவரவர்களே, அரிசனங்களுக்கு வீட்டு மனைக்காக நிலங்களை ஆர்ஜிதம் செய்யும் நேரத்தில் நிலச் சொந்தக்காரர் கள் ஸ்டே வாங்கிவிடுகிறார்கள், எனவே ஸ்டே கொடுக்கும் சட்டத்தைத் திருத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா ?